# இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் செலுத்தவேண்டிய பெறுமதி சேர் வரிப் பணம் ரூபா 15,225,000 ஆக இருந்ததுடன் ஆண்டிற்கான வரி அறிக்கையின் பிரகாரம் செலுத்தவேண்டிய பெறுமதி சேர் வரிப் பணம் ரூபா 16,143,590 ஆக இருந்ததனால் ரூபா 918,590 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு திரண்ட இலாபத்தில் இனங்காண முடியாதிருந்த முன்னைய ஆண்டு செம்மையாக்கல்களாக ரூபா 103,405,215 தொகை வரவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இருப்பில், வெளிநாட்டு திரைப்படம்/ தொலைக் காட்சி நாடகங்களை கொள்வனவு செய்வதிலிருந்து அடுத்துவரும் ஆண்டுகளிற்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளுக்காக இனங்காணப்பட்ட ரூபா 2,544,000 தொகை உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஈ) சந்தைப்படுத்தல் பிரிவின் விற்பனை அலகுக்கான வருடாந்த இருப்பு மெய்மையாய்வின் பிரகாரம் விற்பனைக்காக உள்ள 100 வகையான 3438 டீவீடீ/சீடீ நாடாக்கள் காணப்பட்டிருந்தும் இது தொடர்பான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) வாடிக்கையாளர் கடன்பட்டோர்**

(i) ரூபா 590,034,524 தொகையான வாடிக்கையாளர் கடன்பட்டோரில் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐயக்கடன்களுக்கான ஏற்பாடு ரூபா 131,011,201 அல்லது 22% ஆகிய உயர்ந்த பெறுமதியினைக் கொண்டிருந்தது.

(ii) கடன்வழங்கும் கொள்கையின் பிரகாரம் கடன் கால எல்லை ஒரு மாதத்திற்கு வரையறுக்கப்பட்டிருந்தும் கடன்பட்டோரில் ஒரு மாதத்திற்கு மேற்பட்ட கடன்பட்டோரின் அளவு 76% அல்லது ரூபா 450,361,210 ஆகவும் மூன்று மாதத்திற்கு மேற்பட்ட கடன்பட்டோரின் அளவு 38% அல்லது ரூபா 222,787,840 ஆகவும் இருந்தது. மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்ட வாடிக்கையாளர் கடன்பட்டோரின் மீதி ரூபா 129,018,011 அல்லது 22% ஆக இருந்தது.

(iii) அவ்வாறே கூட்டுத்தாபனத்தின் வாடிக்கையாளர் கடன்பட்டோர் மீதிகளில் 9% அல்லது ரூபா 56,039,150 தொகையான கடன் அரசாங்க நிறுவனங்களிலிருந்து கிடைக்கவேண்டியதாக இருந்ததுடன் அது 1 ஆண்டிலிருந்து 12 ஆண்டுகள் வரையான கால எல்லைக்குரியதாகும். இந்த அரசாங்க நிறுவனங்களுக்கு வர்த்தக மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சிடமிருந்து ரூபா 1,619,601 தொகையும் வெகுசனத் தொடர் அமைச்சிடமிருந்து ரூபா 1,462,000 தொகையும் தேசிய இளைஞர் அமைப்புக்களிடமிருந்து ரூபா 4,931,273 தொகையும் நீர்கொழும்பு மாநகர சபையிடமிருந்து ரூபா 1,136,957 தொகையும் அரசாங்க

அச்சகக் கூட்டுத்தாபனத்திடமிருந்து ரூபா 1,000,000 தொகையும் உள்ளடங்கியிருந்தது.

(iv) வாடிக்கையாளர் கடன்பட்டோர் மீதிகளில் 7% அல்லது ரூபா 42,575,585 தொகை அரசியல் கட்சிகளிடமிருந்து அறவிடவேண்டிய பெறுமதியாக இருந்ததுடன் 1 ஆண்டிலிருந்து 8 ஆண்டுகள் காலத்திற்குரியதாகும்.

(v) வாடிக்கையாளரின் பெயர் குறிப்பிடப்படாத 2 உடன்படிக்கைகளுக்குரிய கடன்பட்டோர் மீதிகளின் பெறுமதி ரூபா 320,600 ஆக இருந்ததுடன் 14 ஆண்டுகளிலிருந்து 16 ஆண்டுகள் வரையான காலத்திற்குரியதாகும்.

(vi) 7 நிறுவனங்களிலிருந்து அறவிடவேண்டிய கடன் மீதி ரூபா 26,355,965 கூட்டு மொத்தமாக இருந்ததுடன் அவை 2 ஆண்டுகளிலிருந்து 10 ஆண்டுகள் வரையான காலத்திற்குள் அறவிடப்படாது காணப்பட்ட கடன்கள் எனவும் மேற்கூறிய 7 நிறுவனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய பெறுமதி மொத்த கடன்பட்டோர் மீதிகளில் 4மூ எனவும் அவதானிக்கப்பட்டது.

**(ஆ) நானாவித கடன்பட்டோர்**

-----------------------------------------

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் ரூபா 60,114,000 தொகையான நானாவித கடன்பட்டோருக்காக ஐயக்கடனுக்கான ஏற்பாடு ரூபா 21,449,142 அல்லது 36% ஆக இருந்தது. அந்த மீதியில் 2 ஆண்டுகள் மற்றும் அதற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்டுவரும் தனிப்பட்டவர்களிடமிருந்து அறவிடப்படவேண்டிய ரூபா 324,034 தொகையும் வெளிநாட்டு தொலைக்காட்சி நிறுவனங்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 4,101,510 தொகையும் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 17,858,971 தொகையும் மருத்துவப்பட்டியல்களை மீளளிப்புச் செய்யும் போது போது காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 598,523 தொகையான மீதியும் உள்ளடங்கியிருந்தன.

36 சதவீதம் ஐயக்கடனாக ஏற்பாடு செய்வதிலிருந்து கூட்டுத்தாபனத்தின் நானாவிதக் கடன் அறவீடு தொடர்பான கட்டுப்பாடு பலவீனமான நிலையில் காணப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது.

**(இ) ஊழயிர் கடன்பட்டோர்**

---------------------------------------

சேவையிலிருந்து விலகிய மற்றும் ஓய்வுபெற்றுச் சென்ற ஊழியர்களிடமிருந்து அறவிடவேண்டிய மீதி தொடர்பாக 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 100% ஐயக்கடனாக ஏற்பாடு செய்யப்பட்ட தொகை ரூபா 179,664 ஆக இருந்தது. உரிய ஊழியர்கள் சேவையிலிருந்து விலகும் போது அவர்களிடமிருந்து அல்லது பின்னர் பிணையாளர்களிடமிருந்து கடன் தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காததன் காரணமாக இவ்வாறு ஐயக்கடனுக்கு ஏற்பாடு செய்யவேண்டி ஏற்பட்டது. உரிய ஊழியர்கள் மற்றும் பிணையாளர்கள் சேவையிலிருந்து விலகுதல், மரணமடைதல், ஊழியர்களினால் தொடுக்கப்பட்ட வழக்குகள் என்பவற்றின் காரணமாக அக்கடனை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது என தலைவர் தெரிவித்துள்ளார்.

**(ஈ) முற்பணம் வழங்குதலும் தீர்த்துவைத்தலும்**

------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வெளிநபர் ஒருவருக்கு நிகழ்ச்சித்திட்டத் தயாரிப்பிற்காக முற்பணமாக வழங்கப்பட்ட ரூபா 250,000 தொகையும் 2007 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளின் போது நிகழ்ச்சித்திட்ட முற்பணங்களாக வழங்கப்பட்டிருந்த ரூபா 26,850 தொகையும் 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2010 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்படாத சேவை தொடர்பாக ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்ட ரூபா 187,500 தொகை உரிய நபர்களிடமிருந்து அல்லது அந்த கொடுப்பனவு தெடர்பாக பொறுப்புக்கூறக் கூடிய தரப்பினர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2008 ஆம் ஆண்டின் போது ஒப்பந்தக்காரர்களுக்கு ரூபா 450,000 தொகையான கணனி நிகழ்ச்சித்திட்டங்கள் உரிய செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்டிருந்த போதிலும் அச்செயற்பாடு நடைமுறை ஆண்டு இறுதி வரையும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

**செலுத்த வேண்டிய கணக்குகள்**

2001 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டு வரை வாடிக்கையாளர் நிறுவனத்திற்கு ரூபா 75,184,086 தொகை செலுத்தவேண்டியிருந்ததுடன் நிறுவனத்திற்கு அக்கடனைத் தீர்த்துவைப்பதற்கு 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இப்பணத்தினை மீளச்செலுத்துவதற்கு உரிய நிறுவனத்தினால் வேண்டுகோள் விடுக்கப்படவேண்டுமென தலைவர் தெரிவித்திருந்தார்.

### 1.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தின் ரூபா 40,024,000 தொகையான காணிகள் மற்றும் அலை பரப்பில் அமைந்துள்ள காணிகள் தொடர்பான உரிமையாண்மை உறுதி, உரிமைமாற்றல் பத்திரம், வர்த்தமாணி அறிவித்தல், மீள் வியாபார உடள்படிக்கையின் கீழ் கூட்டுத்தாபனத்திற்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட திரைப்படங்களின் பெறுமதியினைத் தீர்மானிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட அளவுகோள் என்ன என்ற தகவல்கள் போன்றன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் அவற்றினை திருப்த்திகரமாகச் சான்றுறுதி செய்யமுடியாதிருந்தது.

(ஆ) இறுதி நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மேற்பார்வை பிரிவில் ரூபா 194,904,000 பெறுமதியான இருப்பு மெய்மையாய்வுக்கு உட்பட்டிருந்த போதிலும் மெய்மையாய்வு அறிக்கையில் இருப்பின் பெறுமதி உள்ளடக்கப்படாதிருந்ததனால் மேற்கூறிய பெறுமதியினை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1988 இன் 24 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட தேசிய அரசபொதுச்சபையின் 1975 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் அதிகாரச்சட்டம் | கூட்டுத்தாபனத்தின் பதவிநிலை மற்றும் நிறைவேற்றுத் தரங்களிலுள்ள உத்தியோகத்தர்கள் வருடாந்தம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றினைச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் உரிய 6 உத்தியோகத்தர்கள் வருடாந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றினைச் சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (ஆ) தாபனவிதிக் கோவையின் XLVII ஆம் அத்தியாயத்தின் 21:5 ஆம் பிரிவின் viii மற்றும் x ஆம் பந்திகள் | குற்றங்களிலிருந்து உத்தியோகத்தர் விடுவிக்கப்பட்டால் செலுத்தவேண்டிய ஊதியங்களுக்கு கடமைப் படிகளின் தன்மையில் செலுத்தப்பட்ட படிகள் எதுவும் அதில் உள்ளடக்கப்படலாகாது. எனினும் 2011 யூன் 21 ஆந் திகதிய 766.02.01 ஆம் இலக்க முகாமைத்துவ தீர்மானத்தின் மூலம் நிலவும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு முரணாக அவ்வாறான உத்தியோகத்தர்களுக்கு நிபந்தகைளுடன் மிகையூதியங்கள் செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் ஒரு உத்தியோகத்தருக்கு மிகையூதியமாக ரூபா 77,500 செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் (நி.பி) | |
| I. நி.பி 71(1)உ மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபம் | நிதி மூலங்கள் எதுவாக இருந்த போதிலும் புதிய படிகளைத் தோற்றுவிக்கும் போதும் திருத்தங்கள் செய்யும் போதும் திறைசேரியின் பிரதிச் செயலாளரது முன் அங்கீகாரம் |

பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக 2010, 2011 மற்றும் 2012 யூன் வரையும் ரூபா 27,456,539 தொகை எரிபொருள் படியாகவும் ரூபா 4,660,661 போக்குவரத்துப் படியாகவும் செலுத்தப்பட்டிருந்தன. மேலும் 2010 ஆம் ஆண்டிற்கு முன்னைய எரிபொருள் படியாக 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 1,314,426 தொகையினையும் கொடுப்பனவு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அக்கொடுப்பனவுகளை மீண்டும் அறவீடு செய்வதற்கும் கொடுப்பனவை நிறுத்துவதற்கும் அமைச்சு செயலாளர் மேற்கொண்ட அறிவித்தலினைக் கவனிக்காது தொடர்ச்சியாக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

II. நி.பி 880 — பிணைப் பணம் வைப்புச் செய்யவேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைப்பணம் பெற்றுக்கொள்ளப்படாதிருந்ததுடன் கூட்டுத்தாபனத்தின் காசாளரிடமிருந்து மாத்திரம் பிணைப்பணம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபம்

(i) 5.1.3 ஆம் பந்தி — நாளதுவரையாக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் வருடம் ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவேண்டிய போதிலும் 2011 ஆம் ஆண்டிற்காக அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 6:5:1 ஆம் பந்தி — 2011 ஆம் ஆண்டிற்கான வரைவு ஆண்டறிக்கை நிதி ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 9.4 ஆம் பந்தி — நிறுவனத்தின் உத்தியோகத்தர்களை அமைச்சிற்கு அல்லது ஏனைய நிறுவனத்திற்கு விடுவிப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம்

பெற்றுக்கொள்ளப்பட வேண்டியதுடன் அக்காலத்திற்கு எக்கொடுப்பனவும் செய்யலாகாது. எனினும், அச்சுற்றுநிரு ஏற்பாடுகளுக்கு முரணாக கூட்டுத்தாபனத்தினால் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட 06 உத்தியோகத்தர்கள் கூட்டுத்தாபன சேவையிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்ததுடன் 2011 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையும் அந்த உத்தியோகத்தர்களுக்காக கூட்டுத்தாபனம் ரூபா 4,276,954 ஆன சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தும் மீளளிப்புச் செய்யப்பட்டிருக்க வில்லை.

(உ) 2008 யூலை 28 ஆந் திகதி பீஈடீ/50 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபம் மற்றும் 1999 ஒக்டோபர் 08 ஆந் திகதிய 22/99 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றுநிருபம்

சுற்றுநிருப ஏற்பாடுகளுக்கு முரணாக வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு உரித்துள்ளதாகக் காட்டி MM சம்பளத் தொகுதியின் மற்றும் JM சம்பளத் தொகுதியின் உத்தியோகத்தர்களுக்கு 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் போது முறையே 96 மற்றும் 92 உத்தியோகத்தர்களுக்கு எரிபொருள் படிகளும் 98 மற்றும் 94 உத்தியோகத்தர்களுக்கு போக்குவரத்துப் படிகளும் செலுத்தப்பட்டிருந்தன.

### 1.2.5 சச்சரவுத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

கூட்டுத்தாபனத்தினால் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டு கூட்டுத்தாபன சேவையிலிருந்துத விடுவிக்கப்பட்ட 06 உத்தியோகத்தர்களுக்காக 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளுக்காக ரூபா 240,000 தொகை மிகையூதியமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான ரூபா 172,079,000 தொகையான வரிக்கு முன்னைய இலாபத்துடன் ஒப்பிடுகையில் முன்னைய ஆண்டிற்கான இலாபம் ரூபா 42,120,000 ஆக இருந்ததனால் ஆண்டிற்கான இலாபம் ரூபா 129,959,000 இனால் அதிரிப்பினைக் காட்டியிருந்தது. மீளாய்வாண்டின் போது

மேற்கொள்ளப்பட்ட ரூபா 169,008,170 தொகையினை முற்கொடுப்பனவாகக் கணக்கு வைத்தமை இலாபம் அதிகரிப்பதற்கு காரணமாக இருந்தது.

**2.2 பகுப்பாள்வு ரீதியான நிதிசார் மீளாய்வு**

2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் தொலைக்காட்சி ஒளிபரப்பு காலத்தினை விற்பனை செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானம் 29% ஆல் அதிகரித்திருந்ததுடன் ஏனைய வருமானம் 19% ஆல் குறைவடைந்திருந்தது. ‘‘சனல் ஐ’’ ஒளிப்பரப்புக் காலத்தினை விற்பதன் மூலம் முன்னைய ஆண்டினை விட ரூபா 507,796,000 ஆல் அல்லது 147 சதவீதத்தால் வருமானம் அதிகரித்திருந்ததுடன் ‘‘2011 உலக கிரிக்கட் போட்டியை’’ ஒளிப்பரப்பியமையே அதற்குக் காரணமாகும். பிரதான அலைவரிசையாகிய ‘‘சனல் வன்’’ மூலம் மீளாய்வாண்டின் போது கிடைத்த வருமானம் ரூபா 1,340,696,000 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான ரூபா 1,338,943,000 தொகையான வருமானத்துடன் ஒப்பிடுகையில் அதிகரிப்பு 0.13 சதவீதமாக இருந்தது.

**2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்**

| திரவத்தன்மை விகிதம் | நியம விகிதம் | 2011 | 2010 | 2009 |
|---|---|---|---|---|
| நடைமுறை விகிதம் | 2:1 | 1:0:25 | 1:0:22 | 1:0:25 |
| திரவ விகிதம் | 1:1 | 1:0:34 | 1:0:18 | 1:0:32 |

மேற்கூறிய தகவல்களின் பிரகாரம் திரவ விகிதமானது நியம விகிதத்திற்கு மாற்றமாகக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) கூட்டுத்தாபனத்திற்கு எதிராக/ கூட்டுத்தாபனத்தினால் தொடுக்கப்பட்ட வழக்குகள்**

மீளாய்வாண்டின் இறுதியில் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக வெளித்தரப்பினர்களாலும் கூட்டுத்தாபன பதவியணியினர்களாலும் முறையே 07 மற்றும் 11 வழக்குகள் தொகுக்கப்பட்டிருந்தன. இந்த வழக்குகளுக்காக சட்டத்தரணிகள் கட்டணமாக வெளி சட்டத்தரணிகளுக்கு ரூபா 5,051,095 செலுத்தப்பட்டிருந்தது. வெளித்தரப்பினர்களால் தொடுக்கப்பட்ட 07 வழக்குகள் தொடர்பாக எதிராளிகளினால் கோரப்பட்ட இழப்பீடு ரூபா 1,016,500,000 தொகையும் அமெரிக்க டொலர்கள் 250,000 தொகையுமாகும். அவ்வாறே தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனத்தினால் வெளித்தரப்பினர்களுக்கு எதிராக 32 வழக்குகள் தொடுக்கப்பட்டிருந்ததுடன் அந்த வழக்குகளிலிருந்து கூட்டுத்தாபனம் அறவிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட பணம் ரூபா 134,083,200 தொகையாகும். அதில் 03 ரூபா வழக்குகள் மீளாய்வாண்டின்டின் போது முடிவுறுத்தப்பட்டதுடன், கூட்டுத்தாபனம் அறவிட்ட தொகை ரூபா 486,448 ஆக இருந்தது. இந்த வழக்குகளுக்காகா சட்டத்தரணிகள் கட்டணமாக வெளி சட்டத்தரணிகளுக்கு செலுத்தப்பட்ட தொகை ரூபா 696,250 ஆக இருந்தது. நிதிக்கூற்றுக்களின் கணக்கு குறிப்புக்களில் காட்டப்பட்டுள்ள வழக்குகள் தொடர்பான நிகழத்தக்க பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 1,554,000,000 ஆகும்.

(ஆ) 1992 மற்றும் 1994 ஆம் ஆண்டுகளின் போது இலங்கை பத்திரிகை நிறுவனத்தில் ரூபா 1,104,000 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு வரை எதுவித பங்கிலாபமும் கிடைத்திருக்காததுடன் அந்த முதலீடு தொடர்ந்தும் அவ்வாறே காணப்பட்டிருந்தது.

(இ) உடன்படிக்கைக்குரிய அனைத்து ஒளிபரப்பு காலத்தினையும் வழங்கியதன் பின்னர் பட்டியலினை வழங்கி பணத்தினைப் பெற்றுக்கொள்வதே சாதாரண வியாபார உடள்படிக்கைக்கான பணத்தினை அறவீடு செய்வதற்கான கூட்டுத்தாபனத்தின் கொள்கையாகும் இதற்கிணங்க உடன்படிக்கை காலம் ஒரு ஆண்டு காலமாக இருந்த போதிலும் அந்த முழு ஆண்டும் வருமானம் பெற்றுக்கொள்ளலானது உரிய ஒளிப்பரப்பு காலத்தினை வழங்கி ஒரு

ஆண்டினை மிகைத்ததன் பின்னராகும். இக்கொள்கையானது கூட்டுத்தாபனத்தினால் அறவிடவேண்டிய கடன் தொகையினை அறவீடு செய்வது தொடர்பாக பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது.

## 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

### (அ) மீள்வியாபார உடன்படிக்கை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டிற்கான மீள் வியாபார உடன்படிக்கை வருமானம் ரூபா 58,009,000 ஆக இருந்ததுடன் செலவு ரூபா 65,996,000 ஆக இருந்தது. இதற்கிணங்க, மீள் வியாபார உடன்படிக்கைகளிலிருந்து கூட்டுத்தாபனம் அடைந்த நட்டம் ரூபா 7,987,000 ஆக இருந்ததுடன் இந்த நட்டத்தினை மீள் வியாபார இலாபத்துடன் ஒப்பிடுகையில் 14% ஆக இருந்தது.

(ii) கடன்பட்டோர் மீதியில் உள்ளடக்கப்பட்ட ரூபா 6,572,750 தொகை 05 மீள்வியாபார உடன்படிக்கைகள் தொடர்பான உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படாதிருந்ததுடன் அந்த நிறுவனங்கள் மறுபடியும் கூட்டுத்தாபனத்திற்கு எதுவித சேவையினையும் வழங்கியிருக்கவில்லை.

(iii) கணக்காய்வுக்கு கிடைத்த தகவலின் படி, திரைப்படங்களை கொள்வனவு செய்வதற்காக மேற்கொண்ட மீள் வியாபார உடன்படிக்கைகளைத் தவிர்த்து ஏனைய அனைத்து மீள் வியாபார உடன்படிக்கைகளின் கீழுள்ள பிரிவுகள் உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. ‘‘உடன்படிக்கை செய்யப்பட்ட காலத்தில் உரிய பெறுமதிக்குப் பொருத்தமான சேவையினைப் பெற்றுக்கொள்ள முடியவில்லையாயின் அந்த நட்டம் நிறுவனத்தினால் ஏற்கப்படுதல் வேண்டும்’’ கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட மீள் வியாபார உடன்படிக்கையிலிருந்து கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 1,845,740 தொகையான சாதகமான நிலைமை உருவாகியிருந்த போதிலும் அந்த சாதகமான நிலைமை கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்காது

அதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு இந்த சாதகமான நிலைமை எதிரீடு செய்யப்பட்டிருந்தது.

(iv) 2011 ஆம் ஆண்டின் போது கூட்டுத்தாபனம் 2 திரைப்படங்களுக்காக மீள்வியாபார உடன்படிக்கைகளை மேற்கொண்டிருந்ததுடன் உடன்படிக்கை மேற்கொண்ட திகதியே உரிய திரைப்படம் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்படவேண்டிய போதிலும் ஒரு வியாபார உடன்படிக்கையின் போது அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் தாமத காலம் 09 மாதங்களாக இருந்தன. 2011 நவம்பர் அளவில் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்ட ஒளிபரப்புக் காலத்தின் பெறுமதி ரூபா 12,940,000 ஆகும்.

(v) ஏதும் கால எல்லை மிகைத்ததன் பின்னர் அந்த மீள் வியாபார உடன்படிக்கையில் காணப்பட்ட வரவு அல்லது செலவு மீதி செல்லுபபடியற்றதாகும் வகையில் உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், ரூபா 1,226,285 பெறுமதியான கணக்கு மீதிகள் உரிய காலஎல்லை முடிவடைந்திருந்ததும் தொடர்ந்தும் கடன்கொடுத்தோர் மீதியாக நிதிக்கூற்றுக்களில் காணப்பட்டன.

(vi) ஒரு மீள் வியாபார உடன்படிக்கையில் கூட்டுத்தாபனத்திற்கு சாதகமான மீதி உருவாகியிருந்தும் அந்த உடன்படிக்கையால் வெளித்தரப்பினருக்கும் அந்த நலன் கிடைக்கும் வகையில் இரண்டாம் தடவை உடன்படிக்கை திருத்தப்பட்டிருந்ததுடன் இறுதியில் அந்த உடன்படிக்கைகளிலிருந்து கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 10,996,915 தொகை சாதகமற்ற நிலைமை உருவாகியிருந்தது.

**(ஆ) தொலைக்காட்சி நாடகங்களைக் கொள்வனவு செய்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கணக்காய்வுத் தெரிவுப் பரிசீலினைக்கு உள்ளடக்கப்பட்ட ஏழு தொலைக்காட்சி நாடகங்களில் இரண்டு தொலைக்காட்சி நாடகங்களிலிருந்து கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்த நட்டம் ரூபா 24,203,558 ஆக இருந்தது.

(ii) கணக்காய்வு தெரிவுப் பரிசீலினைக்கு உள்ளடக்கப்பட்ட பதின்மூன்று தொலைக்காட்சி நாடகங்களில் நான்கு தொலைக்காட்சி நாடகங்கள் கூட்டுத்தாபனத்திற்கும் தொலைக்காட்சி நாடக தயாரிப்பாளருக்குமிடையே சட்டரீதியான உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்படுவதற்கு முன்னர் ஒளிப்பரப்பப்பட்டிருந்தது.

(iii) ஒளிப்பரப்புவதற்காக தொலைக்காட்சி நாடகங்களைத் தெரிவுசெய்யும் நடைமுறையின் பிரகாரம் சுதந்திரமான மீளாய்வுச் சபையின் அறிவுறுத்தல்கள் மற்றும் தீர்மானத்தின் கீழ் அங்கீகாரம் வழங்கப்பட வேண்டிய போதிலும் கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைக்கு உள்ளடக்கப்பட்ட பதின்மூன்று தொலைக்காட்சி நாடகங்களில் இரண்டு தொலைக்காட்சி நாடகங்கள் அவ்வாறான ஆய்வுச்சபைக்குச் சமாப்பிக்கப்படாது ஒளிபரப்புச் செய்யப்பட்டிருந்தது.

(iv) மீளாய்வுச் சபை தொலைக்காட்சி நாடகங்களை மீளாய்வு செய்து ஒளிப்பரப்புவதற்காக மிகவும் பொருத்தமானது என சிபார்சு செய்த ஒளிப்பரப்புக் காலமும் உள்ளபடியான ஒளிப்பரப்புக் காலமும் வேறுபட்ட சந்தர்ப்பங்கள் என்று கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைக்கு உள்ளடக்கப்பட்ட பதின்மூன்று தொலைக்காட்சி நாடகங்களில் 5 தொலைக்காட்சி நாடகங்களாக இருந்தன. சில சந்தர்ப்பங்களில் அதனை நடைமுறையில் அமுல்படுத்தமுடியாது எனவும் உதாரணமாக பெரிய தொலைக்காட்சி நாடகங்களின் அனைத்து பகுதிகளையும் மீளாய்வுச் சபைக்குச் சமர்ப்பிக்க முடியாது எனவும் தலைவர் தெரிவித்திருந்தார்.

(v) தொலைக்காட்சி நாடகத்திற்காகச் செலுத்தப்பட்ட தொகையினைத் தீர்மானிக்கும் போது மீளாய்வுச் சபையின் மதிப்பீட்டுப் புள்ளிகளை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளல் அடிப்படை விடயமாக இருந்த போதிலும் கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைக்கு உள்ளடக்கப்பட்ட பதின்மூன்று தொலைக்காட்சி நாடகங்களில் 03 தொலைக்காட்சி நாடகங்கள் மதிப்பீட்டு புள்ளிகளின்றி கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(vi) தொலைக்காட்சி நாடகங்களின் வீடியோ பிரதிகளின் அங்கீகாரத்திற்கான விண்ணப்பப் பத்திரம் உரிய கட்டணத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைக்கு உள்ளடக்கப்பட்ட பதின்மூன்று தொலைக்காட்சி நாடகங்களில் இரண்டு தொலைக்காட்சி நாடகங்கள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) பொருட்களை விற்றுத்தீர்த்தலும் பாவனையிலிருந்து ஒதுக்கிவைத்தலும்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(ii) ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தினால் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் போது 15 பிரிவுகள் புதுப்பிக்கப்பட்டதுடன் அப்பிரிவுகளிலிருந்து அகற்றப்பட்ட பொருட்கள் தொடர்பாகவும் அதன் பெறுமதி தொடர்பாகவும் கோவைகள் பேணப்பட்டிருக்கவில்லை.

(ii) 2011 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் 08 ஆவது பட்டோலையின் பிரகாரம் ரூபா 593,000 பெறுமதியான கருவிகள், உபகரணங்கள், தொலைக்காட்சி, இயந்திரங்கள் என்பன அகற்றுவதற்காகக் காட்டப்பட்ட போதிலும் பொருட்களை ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கிய தகவல்களை உள்ளடக்கும் கோவைகளின் பிரகாரம் வீட்டு பாவனைப் பொருட்கள், கணனிகள் மற்றும் ஏனைய பொருட்களை அகற்றப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அச்சொத்துக்களின் பெறுமதியினை கணிப்பீடு செய்தலும் இடம்பெற்றிருக்கவில்லை. அவ்வாறே இந்த அகற்றப்பட்ட சொத்துக்கள் தொடர்ந்தும் நிகிக்கூற்றுக்களில் காட்டப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

## 3.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

(அ) தொலைக்காட்சியின் கேட்டல் காணல் நூல் நிலையத்தின் நடவடிக்கைகள் முறைப்படியாகவும் செயற்திறனாகவும் இடம்பெறுவதற்காக அதன் நடவடிக்கைகள் கணனிமயப்படுத்தப்பட்டு மேம்படுத்தும் குறிக்கோளுடன் ரூபா 1,734,000 செலவு செய்து 2005 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டுள்ள தானியங்கி

பார்கோட் முறைமையின் (Automated Barcode Solution) பல பகுதிகளும் இலத்திரனியல் நாடா பாதுகாப்பு முறைமையும் (EAS System) 2012 மே மாதம் இறுதிவரையும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டதுடன் அந்த அன்டனாவின் உள்ளமை தொடர்பாக வருடாந்த இருப்பு மெய்மையாய்வு அறிக்கையின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொறியியல் பிரிவின் ரூபா 18,053,000 தொயையான உதிரிப்பாகங்களும் ரூபா 170,000 தொகையான ஒளிப்பதிவுசெய்யப்பட்ட நாடாக்களும் அசைவற்ற இருப்பாகக் காணப்பட்டன.

### 3.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

2011 ஆம் ஆண்டில் 06 பணிப்பாளர் சபைக்கூட்டங்களின் போது ரூபா 12,766,629 தொகையான அறவீடுகளைப் பதிவழிப்பதற்குத் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. இதில் ரூபா 2,064,841 தொகையானது கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்களுக்குரிய ஏற்றுக்கொள்ளக்கூடிய எழுத்துமூல ஆவணம்/ போதியளவான ஆவணங்கள் இல்லாமை மற்றும் பொருத்தமாக உரிய கோவைகளைப் பேணாமை என்பவற்றின் காரணமாக அறவிட முடியாத கடன்களாகும். ரூபா 2,291,697 தொகையான முறையான அங்கீகாரம் இல்லாத அறிவித்தல்களை பட்டியல்படுத்தல் (Sehedule Without Proper Approval)/ குறிப்பிடப்படட்ட தடவைகளுக்கு மேற்பட்ட தடவைகள் பட்டியல்படுத்தப்பட்டதன் (over sheduluing) காரணமாக அறவிடமுடியாத கடன்களாக இருந்ததுடன் ரூபா 100,000 தொகையான பட்டியல்கள் வழங்கப்படாததன் காரணமாக அறவிடமுடியாத கடனாகக் காணப்பட்டது. ரூபா 247,312 தொகையான மேற்கொள்ளப்பட்ட இரண்டு செயற்பாடுகளுக்குரிய நபர்களிடமிருந்து அறவிடமுடியாதிருந்த தொகையினை திரைப்படத் துறையினை மேம்படுத்துதல் எனக் காட்டி பதிவழிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே பதிவழிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்ட ரூபா 85,026 தொகை கூட்டுத்தாபன சேவையிலிருந்து விலகிய/ ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய தொகைகளாகும்.

## 3.5 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 யூன் 30 ஆந் திகதி கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 985 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் 1014 ஆகும்.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் நாயகத்தின் பதவி வகித்தல் 2008 ஆகஸ்ட் 05 ஆந் திகதியிலிருந்து பதில் கடமை ஆற்றும் பணிப்பாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்பட்டதுடன் 2011 நவம்பர் 15 ஆந் திகதியிலிருந்து அப்பதவிக்காக உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கூட்டுத்தாபனத்தினால் ஒப்பந்த அடிப்படையில் 06 உத்தியோகத்தர்களைச் சேர்த்துக்கொள்ளும் போது முறைப்படியாக ஆட்சேர்ப்பு நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. இந்த உத்தியோகத்தர்கள் ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் இந்த உத்தியோகத்தர்களின் வருகை அறிக்கையானது உத்தியோகத்தர் நாளாந்தம் சேவைக்குச் சமூகமளிக்கும் நிறுவனத்தின் உரிய மேற்பார்வை உத்தியோகத்தரினால் சான்றுபடுத்தப்பட வேண்டிய போதிலும் இரண்டு உத்தியோகத்தர்களின் வருகைப் பதிவுகளானது ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டுப் பணிப்பாளர்/ கூட்டுத்தாபன இயக்குனர் சபை அங்கத்தவர்களினால் சான்றுபடுத்தப்பட்டிருந்துது. மேலும் இந்த உத்தியோகத்தருக்காக 2011 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை ரூபா 4,276,954 தொகை சம்பளம், படியாக கூட்டுத்தாபன பணத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

## 3.6 வாகனப் பாவனை

கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான வாகனத் குளாமிலுள்ள வாகனங்களின் எண்ணிக்கை 64 ஆக இருந்ததுடன் அதில் 12 வாகனங்கள் வாடகை, அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களாகும். ஒதுக்கப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை 08 ஆக இருந்தது. 2011 ஆம் ஆண்டின் போது அந்த வாகனங்கள் ஓடிய மொத்த தூரம் 1,659,121 ஆக இருந்ததுடன்

பராமரிப்புச் செலவு ரூபா 6,284,000 ஆகவும் எரிபொருள் செலவு ரூபா 14,039,000 ஆகவும் இருந்தன. அதற்கிணங்க ஒரு கிலோ மீற்றருக்கு மேற்கொள்ளப்பட்ட பராமரிப்பு மற்றும் எரிபொருள் செலவுகள் முறையே ரூபா 3.79 மற்றும் ரூபா 8.46 ஆக இருந்தன.

## 4. கணக்களி தன்மையும் நல்ல ஆளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவில் ஊழியர்களின் எண்ணிக்கை 06 ஆக இருந்தது. முதலாவது அரை ஆண்டின் போது 09 கணக்காய்வு ஐய வினாக்களும் இரண்டாவது அரையாண்டின் போது 12 கணக்காய்வு ஐய வினாக்களும் அனுப்பப்பட்டிருந்தன.

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2005 யூலை 01 ஆந் திகதிய பீஈடீ/31 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை கூடப்பட வேண்டிய போதிலும் 201 ஆம் ஆண்டின் போது ஒரு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. மேலும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களின் போது எடுக்கப்பட்ட தீர்மானங்களை அமுல்படுத்துதல் திருப்தியற்ற நிலையில் காணப்பட்டன.

### 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

வருமானங்களை உரிய முறைப்படி மதிப்பீடு செய்யாததன் காரணமாக பாதீடு செய்யப்பட்ட இலக்கினை விட 80 சதவீதத்திற்கும் 111 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் வருமானம் அதிகரித்திருத்தல் மற்றும் 11 சதவீதத்திலிருந்து 97 சதவீதம் வரையான வீச்சில் வருமானம் குறைவடைந்திருந்தமையும் அவதானிக்கப்பட்டன. செலவுகளும் உரிய முறைப்படி மதிப்பீடு செய்யப்படாததன் காரணமாக 28 சதவீதத்திலிருந்து 69 சதவீதம் வரையாான வீச்சில் செலவுகளில் அதிகரிப்பும் 27 சதவீதத்திலிருந்து 65 சதவீதம் வரையான வீச்சில் செலவுகளில் குறைவும் அவதானிக்கப்பட்டன.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் கூட்டுத்தாபனத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள்

(ஆ) கடன்பட்டோர்/ கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு

(இ) வான் அலை வருமானம்

(ஈ) முற்பணங்கள்

(உ) மீள்வியாபார உடன்படிக்கைகள்

(ஊ) நாட்குறிப்பு பதிவுகள்

(எ) விலைப்பட்டியலிடல்